செய்தி வெளியீடு எண்: 633 நாள்:25.09.2019

<u>செய்தி வெளியீடு</u>

# இந்திய அளவில் I.T.I. தொழிற் பயிற்சி வழங்குவதில் தமிழகம் முதலிடம்
# தொழிலாளர் நலத்துறை அமைச்சர் பாராட்டு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து மாநிலங்களிலும் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சி குழுமம் (National Council for Vocational Training) மூலம் தேசிய தொழிற் சான்றிதழ் வழங்கும் பொருட்டு மத்திய அரசால் (Director General of Training) அகில இந்திய அளவில் தொழிற் தேர்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாநிலத்திலும் அகில இந்திய தொழிற் தேர்வில் தொழிற் பிரிவு வாரியாக முதலிடம் பெறுபவர்களுக்கு தேசிய அளவில் திறன் தேர்வு நடத்தப்பட்டு, அதில் முதலிடம் பெறுபவர்களுக்கு ரூ. 50,000/- ரொக்க பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது 55வது அகில இந்திய தொழிற் திறன் தேர்வில் தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின் கீழ் இயங்கி வரும் திருச்சி அரசினர் தொழிற் பயிற்சி நிலைய இயந்திர வேலையாள் தொழிற் பிரிவை சேர்ந்த பயிற்சியாளரான திரு. சி. சிவகனி மற்றும் பற்றவைப்பவர் தொழிற் பிரிவைச் சேர்ந்த பயிற்சியாளரான திரு. ஆர். புருஷோத்தமன் ஆகிய இரு பயிற்சியாளர்களும் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று தலா ரூ. 50,000/- ரொக்க பரிசு பெற்றனர்.

அகில இந்திய அளவில் திருச்சி அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் மேற்கண்ட இரு தொழிற் பிரிவுகளிலும், சிறந்த தொழிற் பயிற்சி நிலையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய அளவில் முதலிடம் பெறும் பயிற்சியாளர்களின் மதிப்பெண்கள் அடிப்படையில் சிறந்த மாநிலம் தேர்வு செய்யப்படுகிறது. மேற்கண்ட 55வது அகில இந்திய தொழிற் திறன் தேர்வில், தமிழ்நாடு முதலிடம் பெற்று சிறந்த மாநிலமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இதற்கான சுழற்கேடயம் தமிழ் நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறைக்கு மத்திய அரசால் வழங்கப்படவுள்ளது. 55வதுஅகில இந்திய தொழிற் திறன் தேர்வில் முதலிடம் பெற்ற பயிற்சியாளர்களையும், அவர்களுக்கு பயிற்சி அளித்த பயிற்றுநர்களையும், தொழிற் பயிற்சி நிலைய முதல்வரையும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை ஆணையரையும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பாராட்டினார்,

பத்து ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்திற்கு சிறந்த திறன் பயிற்சி அளிக்கும் மாநிலம் எனும் சுழற்கேடயம் கிடைக்கப் பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**